# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 086/2017

ஆணை எண். 71/2017

நாள் : 24/04/2017

திரு. சிராஜ் ஹக்,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005, – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
ஈரோடு மாநகராட்சி,
ஈரோடு. – எதிர் மனுதாரர்

சென்னை மாநகராட்சி, திருவல்லிக்கேணி, அருணாசலம் தெரு, 40–எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு சிராஜ் ஹக் அவர்களின் 12.04.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.04.2017 அன்று பெறப்பட்டு 86/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனுவின் மீது கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை மாநகராட்சி, திருவல்லிக்கேணி, அருணாசலம் தெரு, 40–எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு சிராஜ் ஹக் அவர்கள் 12.04.2017 நாளிட்ட சீராய்வு மனுவினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (குாக்கீது, விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் ) விதிகள் 2015–ன் கீழ் இம்முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்துள்ளார். இதற்கு முன்பு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுதாரரது முறையீட்டு மனு, சாட்சியங்கள், தொடர்புடைய ஆவணங்கள் முதலியன பரிசீலிக்கப்பட்டு இறுதி ஆணை 30.06.2016 நாளிட்ட அசல் மனு எண்.67/மாநகராட்சி/ 2016 எண்ணிட்ட உத்திரவில் பிறப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது மனுதாரர் அனுப்பிய மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட இறுதி ஆணை உத்திரவில் திருத்தம்

செய்யவேண்டியவை எதுவுமில்லை. மேற்படி விதிகள் 2015–ன் விதி 11–ன் கீழ் சீராய்வு மனுக்களினை எதுவும் பெற விதிகளில் இடமில்லை. இக்காரணங்களால் மனுதாரரின் 12.04.2017 நாளிட்ட மனுவினை தள்ளுபடி செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 21–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

திரு சிராஜ் ஹக்,
எண்.40, அருணாசலம் தெரு,
சென்னை – 600 005.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்